Prof. S. Srisatkunarajah.



# University of Jaffna

## Prof.C.Sivagnanasundram
**Memorial Lecture - 2016**

## நந்தியின் நாவல்களில் சமூகநோக்கு

by

**Prof.M.Ragunathan**
Department of Tamil,
Faculty of Arts,
University of Jaffna

on
Wednesday 29th June 2016
at 3.00 p.m

at
Kailasapathy Auditorum
University of Jaffna

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**பேராசிரியர் செல்லத்துரை சிவஞானசுந்தரம் (நந்தி)**
**நான்காவது நினைவுப் பேருரை**

# நந்தியின் நாவல்களில் சமூகநோக்கு

பேராசிரியர் கலாநிதி ம.இரகுநாதன்
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



பேராசிரியர் செல்லத்துரை சிவஞானசுந்தரம் (நந்தி)

# துணைவேந்தரின் ஆசிச்செய்தி

தமிழ் எழுத்துலகில் 'நந்தி' எனும் புனை பெயரில் மிகவும் அறியப்பட்டவரான பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் அவர்களின் நினைவாக வருடந்தோறும் நடாத்தப்பட்டு வருகின்ற நினைவுப்பேருரையினை இவ்வருடம் தமிழ்த்துறைப் பேராசிரியர் ம.இரகுநாதன் 'நந்தியின் நாவல்களில் சமூக நோக்கு' எனும் தலைப்பில் ஆற்றவுள்ளதையிட்டு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பட்டத்தையும் இலண்டன் பல்கலைக்கழகத்தில் பொதுச் சுகாதார டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்கு 1995ஆம் ஆண்டில் D.Sc. பட்டத்தினை வழங்கிக் கௌரவித்துள்ளது.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட சமூக மருத்துவ பேராசிரியராகவும் மருத்துவபீட பீடாதிபதியாகவும் கடமை யாற்றினார் 1979இல் யாழ் பல்கலைக்கழகத்தில் நியமிக் கப்பட்ட முதலாவது மருத்துவ பீடப் பேராசிரியரும் இவரே.

பல சமூக மருத்துவ ஆய்வுக் கட்டுரைகளை எழுதியதோடல்லாமல் பல சர்வதேச மருத்துவக் கருத்தரங்குகளிலும் பங்குபற்றிய சிறப்பு இவருக்குண்டு. 1999இல்இவர் எழுதிய 'Learning Research' எனும் நூல் மருத்துவ மாணவர்களுக்கான பாடநூலாக போற்றப்படுகிறது.

'மலைக்கொழுந்து', 'தங்கச்சியம்மா', 'நம்பிக்கைகள்' ஆகிய நாவல்களையும் 50 சிறுகதைகளையும் பேராசிரியர் சிவஞானசுந்தரம் எழுதியுள்ளார். இதில் இரு நாவல்கள் சாகித்திய மண்டல பரிசு பெற்றவை. மேலும் நான்கு சுகாதார நூல்கள், சிறுவருக்கான அறிவுரை நூல்கள், நாடக நூல் எனப் பதினான்கு நூல்கள் இவரது படைப்புக்களாக வெளிவந்துள்ளன.

இலக்கிய ஆர்வம் கொண்ட மருத்துவ பேராசிரியரான செ.சிவஞானசுந்தரம் அவர்களது நினைவுப் பேருரை இவ்வருடம் தமிழ்த்துறைப் பேராசிரியர் ம.இரகுநாதன் அவர்களினால் தமிழிலக்கியப் பரப்பினிலே நிகழ்த்தப்படுகின்றமை மிகப் பொருத்தமானதாகுமென்றே கருதுகின்றேன்.

பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வணக்கம்,

பெருமதிப்பிற்குரிய துணைவேந்தர் அவர்களே, பீடாதிபதிகளே, பேராசிரியர்களே, விரிவுரையாளர்களே, நந்தியின் குடும்ப உறுப்பினர்களே, ஆர்வலர்களே, மாணவர்களே,

கடந்த 2005ஆம் ஆண்டு வரை எம்மோடு வாழ்ந்த மருத்துவ பீடத்தின் பேராசிரியர்.செ.சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்களின் நினைவை மீட்டுவதற்காக இன்று இங்கே கூடியிருக்கின்றோம்.

பேராசிரியர். செ. சிவஞானசுந்தரம் அவர்கள் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் மருத்துவப் பட்டதாரியாகி சுகாதார அமைச்சிலும், பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் பணியாற்றிய பினனர் 1979இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் முதலாவது பேராசிரியராக நியமிக்கப்பட்டவர். உயர் பட்டங்கள் பலவற்றையும் பெற்றுக் கொண்ட பேராசிரியர் சிவஞான சுந்தரம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் என்ற தகைமையையும் பெற்றுக் கொண்டார்.

மருத்துவ உலகில் ஆய்வுக் கட்டுரைகளையும், நூல்களையும் எழுதித் தனது பணி சாாந்த தகைமையை உறுதி செய்து கொண்ட பேராசிரியர் சிவஞான சுந்தரம், நந்தி என்னும் புனைபெயரில் ஆக்க இலக்கியப் படைப்பாளியாகவும் செயற்பட்டிருந்தார். சிறுகதைகள், நாடகம், நாவல்கள், எனப் பலவாறாக விரிந்து சென்ற இவரது ஆக்க இலக்கிய முயற்சிகள் நந்தியின் பெயரால் பொது மக்களிடையே இன்றும் வாழ்ந்து வருகின்றன. அந்த வகையில் இன்று நந்தியின் நாவல்களில் சமூக நோக்கு என்னும் தலைப்பில் இந்த உரையை ஆற்றுவது மிகவும் பொருத்தமானதாக அமையும் எனக் கருதுகின்றேன். இந்த உரையை ஆற்றுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த துணைவேந்தர் கலைப்பீடாதிபதி ஆகியோருக்கு எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## நந்தியின் நாவல்களில் சமூகநோக்கு

1947ஆம் ஆண்டு சஞ்சலமும் சந்தோசமும் என்னும் சிறுகதையுடன் இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்த நந்தி 1963இல் மலைக்கொழுந்து என்ற நாவலுடன் நாவலாசிரியராகவும் தன்னை வளர்த்துக் கொண்டார். **மலைக்கொழுந்து, தங்கச்சியம்மா, நம்பிக்கைகள்** ஆகிய மூன்று நாவல்களும் **ஊர் நம்புமா, கண்களுக்கு அப்பால், நந்தியின் கதைகள்** ஆகிய மூன்று சிறுகதைத் தொகுதிகளும் **அருமைத் தங்கைக்கு, அன்புள்ள நந்தினிக்கு, நந்தினி உன் குழந்தை** ஆகிய பொது மக்களுக்கான வைத்திய நூல்களும் உங்களைப் பற்றி என்ற சிறுவர் நூலும் **குரங்குகள்** என்ற நாடக நூலும் நந்தியின் படைப்புக்களாக மக்கள் மனங்களில் நின்று நிலைத்திருக்கின்றன. சிறந்த கலை இலக்கிய இரசிகரான நந்தி இலங்கையில் வெளிவந்த பொன்மணி என்னும் திரைப்படத்தில் குணச்சித்திர பாத்திரமொன்றை ஏற்று நடித்த பெருமைக்கு முரியவராவார்.

நந்தி இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்த காலம் இலங்கையில் இலக்கிய விழிப்புணர்ச்சி ஏற்பட ஆரம்பித்த காலமாகும். 1930ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்து சுன்னாகத்திலிருந்து வெளிவந்த ஈழகேசரிப் பத்திரிகை அடிமைத் தனம் அந்நிய மோகம், மொழிப் பற்றின்மை, சமயப் பற்றின்மை, சாதிப்பாகுபாடு, மூட நம்பிக்கைகள் முதலியவற்றிலிருந்து மக்களை விடுவிப்பதையே நோக்காகக் கொண்டு இலக்கியப் படைப்புக்களை வெளியிட்டு வந்தது. ஈழகேசரியின் இலக்கிய முயற்சியால் ஈழத்தில் இலக்கிய வாசகர்களின் தொகை பெருக ஆரம்பித்திருந்தது. ஈழ கேசரிப் பண்ணையில் வளர்ந்த எழுத்தாளர்கள் சிலர் 1943இல் யாழ்ப்பாணத்தில் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம் என்ற பெயரிலான இலக்கிய அமைப்பு ஒன்றையும் உருவாக்கியிருந்தனர். மறுமலர்ச்சி என்ற பெயரிலான இலக்கியச் சஞ்சிகை ஒன்றினையும் வெளியிட்டு வந்த இவ்வமைப்பு 1948இன் பின்னர் செயலிழந்து போனது.

சோவியத்தில் உருவாகிய முற்போக்கு இயக்கம் மார்க்சின் பொதுவுடைமைச் சிந்தனைகளினூடாக வந்த சோசலிச யதார்த்த வாதத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இவர்கள் சோசலிச யதார்த்த வாதச் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட இலக்கியப் படைப்புக்களினூடாக சமுதாயத்தை முன்னேற்று வதையே இலக்காகக் கொண்டிருந்தனர். 1930களின் பிற்பகுதியில் சோவியத் யூனியனின் தோற்றத்துடன் பலம் மிக்கதொரு இலக்கிய அமைப்பாக உருவாகிய இவ்வமைப்பு அனைத்துலக ரீதியிலான ஒரு இலக்கிய இயக்கமாகவும் பரிணமித்தது. இவ்வாறான சூழலிலேயே இந்த இயக்கத்தின் செல்வாக்கு இந்தியாவிலும் பரவியது. 1936இல் அகில இந்திய ரீதியிலான முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்ற அமைப்பு இந்தியாவில் உருவாகியிருந்தது. இதன் ஒரு பிரிவாக தமிழ் நாட்டில் முற்போக்கு இயக்கத்துடன் தொடர்புபட்டிருந்த ப.ஜீவானந்தம், முல்க்ராஜ் ஆனந்த் முதலிய மார்க்சியத் தலைவர்களுக்கு இலங்கை எழுத்தாளர்களுடன் நெருக்கமான தொடர்பு இருந்தது. சுதந்திரப் போராட்ட காலத்தில் இவர்கள் இலங்கைக்கு வந்து சென்றனர். 1946இல் முல்க்ராஜ் ஆனந்த் இலங்கை வந்தபோது மலையகத் தமிழரான கே.கணேஸ், கே. இராமநாதன் ஆகியோரின் முயற்சியால் இலங்கையிலும் முற்போக்கு எழுத்தாளர் சங்கமொன்றை அமைப்பதற்கான அடித்தளம் இடப்பட்டது. இதன் விளைவாக 1947இல் இலங்கை எழுத்தாளர் சங்கம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.[1] நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலையின் விளைவால் இலங்கையில் உருவாகிய இலக்கிய அமைப்புக்களின் செயற்பாடுகள் வேகம் குறைந்தனவாகவே இருந்தன. எனினும் 1953ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்வு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயற்பாட்டிலும் வேகத்தைக் கொடுத்தது. இவர்கள் ஈழத்தில் எழுதப்படும் நவீன தமிழ் இலக்கியங்கள் ஈழத்துத் தமிழ் இலக்கியங்களாக அமைய வேண்டும் என்பதால் அவை ஈழத்தின்

மண் வாசனையைப் பிரதிபலிக்க வேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்தினர்.[2] ஈழத்து மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு எழுதப்படும்போது அவற்றில் ஈழத்தின் பல்வேறு பிரதேச மக்களினதும் வாழ்க்கை முறை, மொழி ஆகியனவும் இலக்கியங்களில் இடம்பெற வேண்டியது அவசியமானது.

ஈழத்துத் தமிழ் இலக்கியம், மண்வாசனை ஆகிய கோட்பாடு களையடுத்து முற்போக்கு அணியினர் தேசிய இலக்கியம் பற்றியும் பேசினர். "ஈழம் வாழ் மக்களிடையே தாம் ஒரு தேசத்தினர். ஒரு நாட்டினர் என்ற உணர்வையும் அவர்களிடையேயுள்ள ஒற்றுமையையும் வளர்ப்பது தேசிய இலக்கியத்தின் நோக்கமாக அமைய வேண்டும் என்றும் தேசியப் பிரச்சினைகளின் பின்னணியில் மக்களின் நிலையை வைத்து ஆராய்ந்து இலங்கையர் என்ற முறையில் வழிகாண்பதன் அவசியத்தை உணர்த்துவதே தேசிய இலக்கியமாகும்." என்பதே தேசிய இலக்கியம் தொடர்பான அவர்களது கருத்தாகும்.[3]

முற்போக்கு அணியினரின் கருத்து நிலை சார்ந்த படைப்புக்களுக்கு புதுமை, மரகதம் ஆகிய இதழ்கள் களமமைத்துக் கொடுத்தன. 1959இல் க.கைலாசபதி தினகரன் பத்திரிகையின் ஆசிரியராக இணைந்து கொண்டதன் பின்னர் தினகரன் பத்திரிகை ஈழத்துத் தமிழ் இலக்கியங்களுக்கு ஏற்றதொரு களமாக அமைந்தது. இவ்வாறான சூழலிலேயே நந்தி இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இணைந்து கொண்டார். நந்தி இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் தலைவராகச் சிலகாலம் பணியாற்றியதுடன் **நூல்** என்ற சஞ்சிகையினையும் வெளியிட்டுள்ளார். நந்தி முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் அங்கத்தவராக இருந்து செயற்பட்டிருந்தாலும் அவரது இலக்கிய நோக்கு முற்போக்கு அணியினரின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவில்லை. ஒரு சமுதாயத்தை

எந்தக் கட்சிக் கட்டுக்குள்ளும் நின்று நோக்காத மனிதாபிமான நோக்காகவே அவரது இலக்கிய நோக்கு அமைந்திருந்தது. இதனை அவரது படைப்புக்கள் தெளிவாகவே உணர்த்தி நிற்கின்றன.

**நந்தியின் நாவல்களில் சமூகப் பிரச்சினை**

இலக்கியமும் சமூகமும் ஒன்றோடொன்று நெருக்கமானவை. இலக்கியப் படைப்பாளியும் சமூகத்தில் உள்ள பலரில் ஒருவனே. அவன் தனது படைப்பிற்கான கருத்து நிலையைத் தான் வாழும் சமூகத்திலிருந்தே பெற்றுக் கொள்கின்றான். படைப்பிற்கான உந்துதலையும் சமூகமே அவனுக்கு வழங்குகின்றது. நாவல் இலக்கியம் உலகானுபவத்தை ஒட்டிச் செல்வது என்பதால் அது தன்னை உருவாக்கிய சமூகத்தை ஏதோ ஒரு வகையில் பிரதிபலிப்பதாகவே அமையும். நாவலின் சமூகப் பிரதிபலிப்பே அதற்கு வாசகர் மனங்களில் அழியாத இடத்தினையும் தந்து சிறப்பிக்கின்றது.

நந்தி என்னும் புனைபெயருக்குரிய செ.சிவஞான சுந்தரம் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் மருத்துவக் கல்வி பயின்றவர். மலேரியா, கொலறா, முதலிய நோய்த் தடுப்புகள் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டுப் பட்டங்கள் பெற்றவர் மருத்துவராக மலையகத்திலும் யாழ்ப்பாணத்திலும் பணியாற்றிய பின்னர் பல்கலைக்கழக சேவையில் நுழைந்து சமூக மருத்துவத் துறையில் பேராசிரியராக உயர்ந்தவர் சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களையும் உயர்த்தப்பட்டவர்களையும் ஒருங்கே கண்டு உள்ளத்தில் வேதனையைச் சுமந்தவர் அந்த வேதனையின் வெளிப்பாடாகவே அவரது இலக்கியப் படைப்புக்கள் அமைந்திருக்கின்றன. நந்தி தான் வாழும் சமூகத்தில் காணப்படுகின்ற குறைபாடுகள் பலவற்றையும் எடுத்துக் காட்டி அக் குறைபாடுகள் இல்லாத புதியதொரு சமுதாயத்தைக் காணவே விரும்பினார். இவரது முதல் நாவலான **மலைக் கொழுந்து**[1] மலையகத் தோட்டத் தொழிலாளர்களின்

வாழ்க்கையை மையமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. தோட்டத் துரைமார்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையேயான முரண்பாட்டினை எடுத்துக் காட்டுவதாக இந் நாவலின் மையக்கரு அமைந்துள்ளது. இரண்டாவது நாவலான **தங்கச்சியம்மா**[5] சாதியம் தொடர்பான முரண்பாடுகளை மையமாகக் கொண்டதாகும். யாழ்ப்பாணத்திலுள்ள பாசக் குளம் என்னும் கற்பனைக் கிராமத்தைக் களமாகக் கொண்ட இந் நாவலில் மலையகத்தவளான தங்கச்சியம்மா என்னும் மருத்துவமாது பாசக்குளத்தில் எதிர்கொண்ட சவால்களை எடுத்துக் காட்டுகின்றது. மூன்றாவது நாவலான **நம்பிக்கைகள்**[6] யாழ்ப்பாணத்திலுள்ள பச்சைவேலி என்னும் கற்பனைக் கிராமத்தைக் களமாகக் கொண்டு இக் கிராமத்து இளைஞன் அம்பிகாபதி பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு மருத்துவ மாணவனாகச் சென்றபோது நகரச் சூழலால் கவரப்பட்டு இலட்சியப் பாதையிலிருந்து விலகிச் செல்வதை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. இந் நாவலின் கதைப் போக்கில் சாதிய வர்க்க முரண்பாடுகளும் பொருளாதார இன உறவுகளின் முரண்பாடுகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. முதல் இரண்டு நாவல்களுடனும் ஒப்பிடும் போது இந் நாவலில் நந்தியின் படைப்பாக்கத் திறனின் வளர்ச்சியைத் தெளிவாக இனங்காணக் கூடியதாகவுள்ளது. நம்பிக்கைகள் நாவலைப்படித்த வாசகர்களுக்கு நந்தியின் அடுத்த படைப்பு மேலும் உன்னதமான ஒரு படைப்பாகவே அமையும் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் இருந்தபோதும் அவரது மறைவு ஏமாற்றத்தையே கொடுத்துவிட்டது.

**தீண்டாமை**

தமிழர்களின் சமூக அமைப்பிலே சாதி, மதம் ஆகியன பிரதான இடத்தினை வகிக்கின்றன. நிலவுடைமைப் பொருளாதார சமூக அமைப்பின் தன்மைக்கேற்ப உற்பத்திச் சாதனங்கள் ஒரு சில சாதியினரின் தனிப்பட்ட சொத்தாகவே இருந்ததால் அவர்கள்

பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய சில சாதிக் குழுக்களைத் தமது அடிமை குடிமைகளாக்கித் தமது தேவைகளுக்குப் பயன்படுத்தி வந்தனர். இருபதாம் நூற்றாண்டில் உலகெங்கும் ஏற்பட்ட சமூக விழிப்புணர்ச்சியால் அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழர்களும் தமது உரிமைகளுக்காகப் போராட முற்பட்டனர். 1950களின் மத்தியில் இலங்கையின் வடபகுதி சாதியத்திற்கெதிரான யுத்த பூமியாகவே மாறியிருந்தது. இத்தகைய சூழலில் ஆக்க இலக்கியம் படைத்த பலருக்கும் சாதிய ஒடுக்குமுறையே இலக்கியப் பொருளானது. நந்தி தனது நாவல்களில் சாதியத்தைப் பிரதானபொருளாகக் கொள்ளாவிட்டாலும் சாதியம் சார்ந்த பிரச்சினைகளைக் கோட்பாடு ரீதியாக அணுகாமல் மனிதாபிமான உணர்வோடு வெளிப்படுத்தியுள்ளார்.

நந்தியின் இரண்டாவது நாவலான **தங்கச்சியம்மா**வின் களம் சாதிய ஒடுக்கு முறைக்கு உட்படுத்தப்பட்ட மக்கள் வாழும் பாசக்குளம் என்ற கிராமமே ஆகும். பாசக் குளத்திற்கு மருத்துவமாதாகப் பணியேற்று வந்த மலையகத்தவளான தங்கச்சியம்மாவிற்கு கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனையில் கடமையாற்றும பியோன் கந்தையா,

> "தங்கச்சி நீர் டவுண் வட்டாரத்தில் வேலை செய்யக் கேளும், பாசக் குளப் பகுதியிலை வேலை செய்து கொள்ள மாட்டீர். அது குறைஞ்ச சாதிக்காரரின் பகுதி. எல்லாரும் நட்டா முட்டியள். நான் அறிய ஒரு மருத்துவப் பெட்டையும் அங்கே போனது இல்லை"[7].

என்று கூறும் போது பியோன் கந்தையாவின் வடிவில் யாழ்ப்பாணத்து உயர்த்தப்பட்ட மக்களின் மனநிலையே வெளிப்படுகின்றது. இதே கந்தையா அலுவலகத்திலிருந்த படமொன்றை "பாசக்குளத்து நளப்பொடியன் ஒருத்தன் கீறின படம்"[8] என்று தங்கச்சியம்மாவுக்குக் கூறும் போது அவரின் சாதிய வெறியின் தன்மை மேலும் தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றது.

இந் நாவலில் வருகின்ற சூரிய கலா பாசக் குளத்தில் உள்ள பாடசாலையில் ஐந்தாம் வகுப்புவரை படித்தவள் அவள் ஆறாம் வகுப்பிற்கு அனுமதி கேட்டு அண்மையிலுள்ள பாடசாலை யொன்றிற்குச் சென்ற போது அங்கு சாதியின் பெயரால் அவளுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது. பின்னர் வேறொரு பாடசாலையில் அனுமதி கிடைத்தாலும் அங்கும் சாதியம் அவளைத் தொடர்ந்து படிக்க விடாமல் விரட்டி விடுகின்றது. பாடசாலைக் கிணற்றில் சூரிய கலா தண்ணீா அள்ளிய போது உடன் நின்ற மாணவியொருத்தி,

"எங்கடை வீட்டிலை என்றால் உன்னைக் கிணற்றிலை அள்ள விடமாட்டோம்" [9] என்று கூறுகின்றாள். இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத சூரிய கலா அந்த மாணவியின் கன்னத்தில் அடித்து விடுகிறாள். இச் சம்பவம் அவளின் பாடசாலை வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகின்றது. கிராமத்திற்கு வந்த மருத்துவமாதான தங்கச்சியம்மாவிற்கு சூரிய கலா இச்சம்பவம் பற்றிக் கூறியதுடன்

"..................... என்னுடன் படிச்சுக் கெட்டித்தனமாக பாஸ் பண்ணிய பிள்ளைகளுக்காகவும் தான் பேசுகிறேன். ஆசிரியர் ஆக வேண்டிய வர்கள் நல்ல உத்தியோகம் பார்க்க வேண்டியவர்கள். வசதி இல்லாமலும் வசதி இருந்தாலும் சாதி என்ற கொடுமையால் ஒதுக்க ப்பட்டும் அடுப்போடும் உரல் உலக்கையோடும் கிடக்கிறார்கள் [10].

என்று கூறும் போது சாதிக்கொடுமையால் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்த மாணவர்களின் பரிதாப நிலையை உணரக் கூடியதாகவுள்ளது.

மேலும், சூரிய கலா நன்றாகப் பாடக்கூடியவள். பாடசாலைக்கு அண்மையிலுள்ள அச்சுவேலிப் பிள்ளையார் கோயிலில் தேவாரம் பாடுவதற்காக மாணவர்களை அழைத்துச் சென்ற ஆசிரியர் சூரியகலாவைப் புறக்கணித்து விடுகின்றார். அவ்வாறே புறொக்டர் வீட்டில் நடைபெற்ற சாயிபாபாவின்

பஜனையிலும் அவள் புறக்கணிக்கப்படுகின்றாள். ஆனால், அவள் பாடிப் பதிவு செய்த பாடல்கள் அங்கே ஒலிக்கின்றன.[11] "பாடசாலையில் அவளுக்குச் சகாயச் சம்பளத்திற்குப் பரிந்துரைத்த ஆசிரியர் அவளை லோகாஸ்ற் என்று அதிபருக்கு அறிமுகப்படுத்துகின்றார்.[12]

இச் சம்பவங்களினால் விரக்தியடைந்த சூரிய கலா பாடசாலையை விட்டே விலகிச் சென்று விடுகின்றாள்.

பாசக்குளத்து வாலிபர்கள் சிறுபான்மைத் தமிழர் முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பை உருவாக்க முற்பட்ட போது அதன் தலைவராக பாலசிங்கத்தின் பெயரை முன்மொழிகின்றனர். பாலசிங்கம்

> "இப்படியான முற்போக்கு முயற்சிகளுக்கு நான் எனது முழு ஆதரவையும் சேவையையும் கொடுக்க ஒப்புக் கொண்டுள்ளேன். ஆனால் நான் என்னை ஒரு சிறுபான்மைத் தமிழன் என்று எண்ணுபவனல்ல. அப்படி என்னையே நான் தாழ்த்திக் கொண்டு ஒரு பதவியை ஏற்கத் தயாராக இல்லை.........."
>
> ".............. நமது நாட்டில் எண்ணிக்கையில் தமிழரனைவரும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். இது புள்ளி விபரவியல் உண்மை. ஆனால் தமிழரிடையே உள்ள உளுத்துப் போன சில கோட்பாடுகளால் மேலும் பலர் அடக்கப்படுவதும் தாழ்த்தப்படுவதும், பழிக்கப்படுவதும் உலகம் அறிந்த ஒன்று. ஆகையால் நாமே சாதி என்ற சலசலப்புக்கு அர்த்தமோ, அந்தஸ்தோ அளவு கோலோ உண்டாக்கி மேலும் அந்த அபத்தத்தை நீடிக்க வேண்டாம்.
>
> "என்னை யாரும் மனித மதிப்புக்கு ஒவ்வாத முறையில் ஏதாவது லேபல் போட்டு அழைத்தால் அடிப்பேன்"[13]

என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறும்போது நந்தியின் தீண்டாமைக்கு எதிரான சமூக உணர்வே வெளிப்படுகின்றது. மேலும் பாசக்குளத்தில் கொலறா நோய்த் தடுப்பிற்காக வந்த வெளிநாட்டவரான டாக்டர்

கொனாற்றே

> " தமிழர்கள் சாதி என்ற பெயரில் கணிசமான ஒரு பகுதித் தமிழர்களைத் தாழ்த்துவதும் நிராகரிப்பதும்தான் எனக்கு ஆச்சரியம் தருகிறது. நீங்கள் படித்தவர்கள், பெரிய நாகரிகம் உள்ளவர்கள், பண்புள்ளவர்கள், பய பக்தியானவர்கள் - அப்படி இருந்தும் மனிதனைப் பிறவியிலேயே குறைந்தவன் என்று கூறும் அளவிற்கு எப்படி மனம் படைத்தவர்களாக இருக்கிறீர்கள்? எனக்கு விளங்கவில்லை. உங்களின் இளைஞர்கள் இந்தச் சமூக விகற்பத்தை எப்படி ஏற்றுக் கொள்கிறார்கள். உங்களில் இளைஞரே இல்லையா?

எனக் கேட்பதும் அதற்கு டாக்டர் காசிநாதன்,

> " எங்கள் மத்தியில் வாலிபர் இல்லை என்றுதான் ஒத்துக் கொள்ள வேண்டும். நவீன காலத்திற்கு ஏற்ற இளைஞர் எம்மிடையே இருந்திருந்தால் ஒரு கிழமையிலேயே இந்தச் சாதிப் பிரச்சினை ஒழிந்திருக்கும். [14]

எனக்கூறுவதும் நந்தியின் சமூகப் பார்வையின் வெளிப்பாடே இங்கு நந்தி இளைஞர்களைப் பார்த்து ஏன் நீங்கள் அடங்கிப் போகின்றீர்கள் என்று கேட்டு அவர்களை விழிப்படைய வைக்கின்றார்.

**நம்பிக்கைகள்** என்னும் நாவலில் வருகின்ற யேசுதாசன் மாஸ்டரின் தகப்பனின் தகப்பன் பரியாரியாக இருந்தவர். இவரே அம்பிகாபதியின் குடும்ப வைத்தியராகவும் இருந்தவர் . இப்போது யேசுதாசன் மாஸ்டர் பச்சைவேலிக் கிராமத்துப் பாடசாலையின் தலைமை ஆசிரியராக வந்திருக்கின்றார். அம்பிகாபதியின் வீட்டில் யேசு தாசன் மாஸ்டருக்கு தேனீர் வழங்குவதற்குத் தனியான கோப்பையே பயன்படுத்தப் படுகின்றது. யேசுதாசன் படித்தவராக இருந்தாலும் எந்தப் பதவியில் இருந்தாலும் அவர் பச்சை வேலியில் மரமேறுவோர் பகுதியைச் சேர்ந்தவராகவே கணிக்கப்படுகின்றார்.

“அவர் அந்தக் கிராமத்திலே கிழக்குப் பகுதியைச் சேர்ந்தவர். அவருடைய தகப்பனின் தகப்பன் கூடப்பரியாரியாக இருந்திருந்தாலும்,கிழக்குப் பகுதியிலே பலர் இப்போது படித்தவர்களாக இருந்தாலும் கடையும் கராஜும் வைத்திருந்தாலும் தச்சுவேலையும் வேறு வேலைகளும் செய்தாலும் அவர்கள் பகுதி மர மேறுவோர் பகுதிதான்.[15]

எனக் கூறும்போது யேசுதாசன் மாஸ்டர்,

“இவ்வுலகிலே தென்னையும் பனையும் இருக்கும் வரை எங்கள் பக்கம் மரமேறுவோர் பகுதியாகவே இருக்கும்” [16] எனக் கூறுவதும் யாழ்ப்பாணச் சமூகம் தொடர்பான நந்தியின் கணிப்பாகவே தெரிகின்றது.

மேலும் இனமுரண்பாடு யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தை எரித்ததையும் சாதிய முரண்பாடு பச்சைவேலிக் கிராமத்து வாசிகசாலையை எரித்ததையும் ஒருங்கே காட்டுவதால் அரசியல்வாதிகளின் வகுப்புவாதச் சிந்தனைகளுக்கு அப்பால் நின்று சுயமாகச் சிந்திப்பதற்கான பாதைக்கு நந்தி வழிகாட்டுகின்றார். [17]

மேலும் பேராதனையில் படித்தபோது மூன்று வருடங்கள் ஒரே அறையில் தங்கியிருந்து ஒன்றாக உணவுண்டவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்த பின்னர் சாதி பார்த்து ஒதுங்கி விடும் மனோபாவத்தை உடையவர்களாக மாறி விடுகின்றனர். சைமனின் திருமண விருந்தில் பாஸ்கரன் உணவுண்டதை அறிந்த விஸ்வலிங்கம் முகம் சுழிக்கின்றான். விஸ்வலிங்கத்தின் முகச் சுழிப்பின் அர்த்தத்தை பாஸ்கரன் விளங்கிக் கொள்கின்றான்.

“சைமன் ஒரு பறையன். ஆனால் புரிய முடியாதது ஒன்று, மூன்று மாதங்களுக்கு முன்பு கூட பேராதனையில் விஸ்வலிங்கம் தானாகவே சைமனுடன் ஒன்று சேர்ந்து ஒரே அறையில் வசித்தவன். இப்படியாக மூன்று வருடங்கள் இருந்தவன். யாழ்ப்பாணத்தில் அவன் வீட்டிலிருந்து சைமன் கொண்டு வந்த கேக், பற்றீஸ், இறைச்சி றோல் எல்லா வற்றையும் உண்டவன். இந்த யாழ்ப்பாணம்

வந்தபின்தான் டொக்டர் .சைமன் பறையனாகி விட்டான்.[18] "..........அந்தப் பிரச்சினை இந்த மக்களின் குருதியிலும் நரம்பிலும் ஊறிக் கலந்திருக் கின்றது. இது அவர்கள் வீடுகளின் தூணிலும் இருக்கும் துரும்பிலும் இருக்கும்" [19] என்று சிந்தித்து பாஸ்கரன் சிரிப்பதாக நந்தி குறிப்பிட்டுள்ளார். இது பாஸ்கரனை மையமாகக் கொண்ட நந்தியின் சமூகப் பார்வையே.

யாழ்ப்பாணச் சமூகத்தின் சாதிய ஒடுக்கு முறைக்கு இந்திய வம்சாவழித் தமிழர்களும் தப்பிவிடவில்லை. இந் நாவலில் வருகின்ற அன்னலட்சுமிக்கு நாவலப்பிட்டியில் பெரிய புடைவைக் கடைக்குச் சொந்தமான ஒருவரைத் திருமணம் பேசிய போது அன்னலட்சுமியின் தாய் இந்தியன் எனக்கூறி மறுப்புத் தெரிவிக்கின்றாள். ஆனால் பருவ வயதில் திருமண வாய்ப்பை இழந்த அன்னலட்சுமி தாயின் சாதியபிமானத்தைப் புறக்கணித்துத் திருமணத்திற்கு உடன்படுகின்றாள்.[20] இது சாதியபிமானத்தால் யாழ்ப்பாணத்துப் பெண்கள் பலர் திருமண வாய்ப்பை இழந்து விடுவதைக் கண்ட நந்தியின் சாதியபிமானங் கடந்த கருத்து நிலையின் வெளிப்பாடாகும். அன்னலட்சுமியின் முடிவு நந்தி யாழ்ப்பாணத்துப் பெண்களுக்குக் கூறும் அறிவுரையாகவே கருதப்படத்தக்கதாகும்.

பொதுவாக, நந்தி முற்போக்கு இயக்கத்தின் உறுப்பினராக இருந்தபோதும் சாதியம் தொடர்பான அணுகுமுறையில் சற்று வேறுபடுகின்றார். இவர் சாதியத்தை சித்தாந்த அடிப்படையில் நோக்காமல் மனிதாபிமான நோக்கில் நின்றே அணுகியுள்ளார். என்பதை இவரது நாவல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

**கல்விப் பிரச்சினை**

கல்வி கற்பதற்கான உரிமை ஒருவனது பிறப்புரிமை. ஆனால் தமிழர் சமுதாயத்தில் இந்த உரிமை சாதியின் பெயரால் ஒரு பகுதித் தமிழர்களுக்கு மறுக்கப்பட்டிருந்தது. ஆங்கில ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட சமூக மாற்றமே எல்லோருக்கும் கல்வியுரிமையை

வழங்கியது. ஆனால் கல்வி கற்பதற்கு வழங்கப்படுகின்ற உரிமை மட்டும் கல்வி கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி விடப் போவதில்லை.

நந்தியின் மலைக்கொழுந்து நாவலில் மாணிக்கமலைத் தோட்டத்தில் உள்ள பாடசாலையின் நிலைபற்றிக் கூறப்பட்டுள்ளது. இங்குள்ள ஒரேயொரு பாடசாலையில் ஐந்தாம் வகுப்புவரை மட்டுமே உள்ளது. இங்கு சுமார் எண்பது பிள்ளைகள் படித்து வந்தார்கள். எண்பது பிள்ளைகளுக்கும் ஆசிரியராய், அதிபராய், பியோனாய், குமாஸ் தாவாய் பணியாற்ற இருந்தவர் ஒரே ஒரு ஆசிரியரே. அவர் கூட வாயில் ஏற்பட்ட புண்ணினால் ஆறுமாத காலம் பேச முடியாதவராகவே இருந்து பணியாற்றி விட்டு யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுவிடுகின்றார். ஆசிரியர் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டதால் தோட்ட நிர்வாகம் அந்தப் பாடசாலையை மூடிவிட்டு அக்கட்டிடத்தை டிஸ்பென்சருக்கும் கண்டக்டருக்கும் மாட்டுத் தொழுவமாக உபயோகிக்க வழங்கிவிடத் தீர்மானிக்கின்றது.[21] இவ்வாறே விக்டோரியாத் தோட்டத்திலுள்ள பாடசாலையிலும் நூற்றைம்பது பிள்ளைகளுக்கு ஒரே ஒரு ஆசிரியரே பணியாற்றுகின்றார்.[22] உண்மையில் இது வெறும் ஏமாற்றுவித்தையே. இங்கு ஆசிரியருக்கு சம்பளம், பதவி உயர்வு ஆகிய வசதிகள் அனைத்தும் இலகுவாகவே கிடைத்துவிட மாணவர்கள் தொடர்ந்தும் கல்வியறிவில்லாதவர்களாகவே இருந்து வருவது தவிர்க்க முடியாததே. இத்தகைய நிலையில் மலையக இளைஞர்கள் விழிப்படைந்து தமது பிள்ளைகளின் கல்விக்காகப் போராடுகின்றனர். மலையக இளைஞனான முத்துக் கறுப்பன்.

> "தோழர்களே! லட்சக் கணக்கான நம்ம பிள்ளைகள் கல்வி அறிவில்லாமல் இருக்கிறாங்க. இது நம்மைத் தொடர்ந்து அடிமைகளாக்க ஒரு பெரும் சூழ்ச்சி தோட்ட முதலாளிகள் இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். அவர்கள் பிள்ளைகள் கண்டியில் பெரிய பள்ளிகளில் படிக்கிறாங்க.

கார்களில்தான் போவாங்க. அந்தக் கார்களை நாம் வழிமறித்து அடித்து உடைக்கணும்.[23]

இது மலையக இளைஞர்களின் விழிப்புணர்வுக்கு எடுத்துக் காட்டு என்பதுடன் கல்வியறிவின்மையே மலையக மக்களைத் தொடர்ந்தும் அடிமைகளாக்கி வைத்திருப்பதற்குக் காரணம் என்பதை இனங்கண்டு கொண்ட நந்தியின் சமூகப் பார்வையின் வெளிப்பாடு மேயாகும்.

**தங்கச்சியம்மா** என்னும் நாவலில் வருகின்ற சூரியகலாவிற்கு அவளின் சாதியின் பெயராலேயே பாடசாலையில் அனுமதி மறுக்கப்பட்டது.[24] இது அவளின் பிறப்புரிமையான கல்வியைப் பெறுவதற்கு சாதி தடையாக நிற்பதை எடுத்துக் காட்டுகின்றது. மலையக மக்களின் கல்வியுரிமை முதலாளிகளின் சூழ்ச்சியால் தடுக்கப்பட்டது. வட இலங்கைத் தமிழர்களில் ஒரு பகுதியினரின் கல்வி உரிமை சாதிக் கொடுமையால் மறுக்கப்படுகின்றது.இந்த இரு சாராரும் பொருளாதார பலமற்றவர்கள் இதனால் இவர்களின் முன்னேற்றம் அடக்கியாள்வோரால் தடுக்கப்படுகின்றது என்பதை நந்தி சுட்டிக் காட்டுகின்றார்.

**நம்பிக்கைகள்** என்னும் நாவலில் கல்வி கற்பவர்கள் தனிப்பட்ட முறையில் எதிர்நோக்கும் சிக்கல்களையும் கல்வி கற்றவர்களின் சமூக அந்தஸ்தையும் எடுத்துக் காட்டுகின்றார். அம்பிகாபதியின் மருத்துவக் கல்விக்காக அன்னம் தனது காணியை விற்க நேரிடுகின்றது.[25] டாக்டராகி வரும் அம்பிகாபதி தனது மகள் இராசாத்தியைத் திருமணம் செய்வான் என்ற எதிர்பார்ப்பில் மாமன் அவனுக்கு மாதாமாதம் பணம் அனுப்புகின்றார்.[26] உண்மையில் இது அம்பிகாபதி என்ற தனிமனிதன் ஒருவனுக்கு ஏற்பட்ட பிரச்சினையல்ல. உயர் கல்வி கற்க முற்பட்டு வறுமையால் அல்லற்படுகின்ற பலரின் வகை மாதிரியான ஒருவனே அம்பிகாபதி என்பதால் இது ஒரு சமூகப் பிரச்சினையாகவே கருதப்பட வேண்டியதாகும்.

யாழ்ப்பாணச் சமூகத்தில் கல்வியின் விளைவால் பெறப்படுகின்ற உத்தியோகங்களுக்கு திருமணச் சந்தையில் அதிகளவு பெறுமதி கிடைப்பதையும் நந்தி சுட்டிக் காட்டுகின்றார். ஈஸ்வரியை டாக்டர் பிறைசூடி திருமணம் செய்வதற்கும் அம்பிகாபதியைப் பாமினிக்குத் திருமணம் செய்து வைக்க பாமினியின் பெற்றோர் விரும்புவதற்கும் [27] கல்வியால் ஏற்பட்ட அந்தஸ்து உயர்வே காரணமாகும் என்பது நம்பிக்கைகள் நாவலினூடாக வெளிப்படுத்தப்படும்போது நந்தி சமூக யதார்த்தத்தை எவ்வாறு புரிந்து வைத்திருக்கின்றார். என்பது புலனாகின்றது.

மேலும் சமுதாய ஏற்ற இறக்கங்களுக்குக் காரணமாக இருந்த கல்வி அரசியல் மாற்றங்களுக்கும் முக்கிய காரணமாக அமைவதையும் நந்தி சுட்டிக் காட்டுகின்றார். கல்விக்கு முதன்மை அளிக்கின்ற சமூகத்தில் உயர்கல்வி தொடர்பாகக் கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் முறையால் இளந் தலைமுறையினர் விரக்தியுற்றுத் தமது அரசியல் பாதையை மாற்றியமைக்க முற்பட்டதையும் நந்தி எடுத்துக் காட்டுகின்றார். [28]

**சமூக முன்னேற்றப் பணிகள்**

இலக்கியப் படைப்பாளிகளில் சிலர் சமூகத்திலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதோடு நின்று விடுகின்றனர். நந்தி அவ்வாறானவர்களின் வரிசையில் சேராமல் சமூகக் குறைபாடுகளை எடுத்துக் காட்டுவதுடன் அவற்றை நீக்குவதற்கு மேற்கொள்ள வேண்டிய சமூக முன்னேற்றப் பணிகளையும் எடுத்துக் காட்டுபவராக உள்ளார். இது அவரது சமூக நோக்கினை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

மலைக் கொழுந்து நாவலின் பிரதான பாத்திரமாக வருகின்ற மலையப்பன் மலையக மக்களின் நல்வாழ்வையே தனது வாழ்வாகக் கருதுபவன். மலையக மக்களை ஒன்றுபடுத்தி அவர்களின் உரிமைக்காகப் போராடுவதற்காக அவன் பல்வேறு தொழிற் சங்கங்களையும் இணைக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றான்.

முதலாளிகளின் சூழ்சிக்குப் பலியாகிப் போன தனது மாமன் ரங்கசாமியையே எதிர்த்து நின்று தொழிலாளர்களின் நன்மைக்காகக் குரல் கொடுக்கின்றான் மலையப்பன்.[29]

முதலாளிகள் தோட்டத்து மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதில்லை என்பது பொதுவான குற்றச் சாட்டாக இருந்தாலும் தோட்டத்து மக்களிற் சிலரும் சமூக நலனில் அக்கறை இல்லாதவர்களாக இருக்கின்றார்கள் என்பதை மலையப்பன் மூலமாக நந்தி எடுத்துக் காட்டுகின்றார். இவர்கள் தண்ணீர்க் குழாய்களை கவனமாக உபயோகிப்பதில்லை, தண்ணீர்க் குழாய்களின் பாகங்களையும் லயங்களின் பொது மலகூடங்களின் கதவுகளையும் இரவிரவாகத் திருடி விற்று விடுகின்றனர்.[30] இதனைச் சுட்டிக் காட்டும் நந்தி மலையக மக்கள் இந்த அறியாமையில் இருந்து விடுபட்டு முன்னேற்றப் பாதைக்குத் திரும்ப வேண்டும் எனச் சிந்திக்கின்றார்.

ஆதரவற்றவனாகத் திரிந்த குருடனான பண்டாரிக்கு மலையப்பன் வாழ வழிகாட்டுகின்றான். பண்டாரி ரவுணில் ஓர் இடத்தில் இருந்து பத்திரிகை விற்பவனாக மாற்றப்படுகின்றான்.[31] இது பண்டாரி என்ற தனியொருவனை வகை மாதிரியாகக் கொண்டு ஏன் இவர்களுக்கெல்லாம் வாழ வழிகாட்ட முடியாதா என்ற நந்தியின் சமூக நலச்சிந்தனையே இங்கு பண்டாரிக்கு வழிகாட்டுவதாக அமைந்துள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு வந்த மலையப்பன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலுள்ள இரத்த வங்கிக்குச் சென்று இரத்ததானம் செய்கின்றான். இரத்த வங்கித் தொழிலாளி மலையப்பனுக்கு,

> "மலையப்பா! யாழ்ப்பாண மக்கள் தங்கள் நெருங்கிய உறவினருக்குக் கூட இரத்த தானம் செய்ய வருவதில்லை.... ஆஸ்பத்திரியின் இரத்த வங்கி சில வேளைகளில் வற்றிப் போகிறது. அவசர கேஸ்களுக்குக் கூட இரத்தம் இல்லாத காரணத்தினால் சத்திர சிகிச்சைகள் ஒத்திப் போடப் படுகின்றன."[32]

எனக் கூறுகின்றான். இதைக் கேட்ட மலையப்பன் வெட்கப்படுவதாக நந்தி குறிப்பிடுகின்றார். உண்மையில் இங்கு வெட்கப்பட வேண்டியவர்கள் யாழ்ப்பாண மக்களேயன்றி மலையப்பனல்ல. இது நந்தியின் யாழ்ப்பாண மக்கள் குறித்த சமூகப்பார்வை.

**தங்கச்சியம்மா** என்னும் நாவலின் பிரதான பாத்திரமான தங்கச்சியம்மா, பாசக்குளத்துக் கிராம சேவகர் சண்முகமணி, சூரியகலா, செல்வராணி, பாலசிங்கம் முதலியோர் சமூக முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர்களாகவே படைக்கப் பட்டுள்ளனர். தங்கச்சியம்மா மன உறுதியோடு பாசக் குளத்து மக்களுக்குச் சேவை செய்யத் துணிந்து விட்டதை அவளின் வார்த்தைகளினூடாகவே நந்தி எடுத்துக் காட்டுகின்றார்.

> "நான் பஞ்சாகவோ பூவாகவோ பாவையாகவோ மாறப்போவதில்லை. நான் அ∴றிணைப் பொருளல்ல. அலங்கார வஸ்துவும் அல்ல. நான் ஒரு வாழ்வின் ஒரு சேவையின் ஆரம்ப நிலையில் நிற்பவள். அறிவின் அனுசரணையோடு எனது படிப்பின் அடிப்படையில், மனக்கட்டுப்பாட்டுடன் எனது கடமையைப் பாசக்குளத்து மக்களுக்கு ஆற்றத்தான் போகிறேன். கடமை மட்டுமா? வைத்திய வட்டாரத்தில் மிகவும் சிறிய தொழிலாகக் கணிக்கப்படும் எனது மருத்துவமாது சேவையை ஒரு சமூகத் தொண்டாகவும் சிரமதானமாகவும் கருதப் போகிறேன்". [33]

எனக் கூறும் போது கதைப் போக்கில் தங்கச்சியம்மாவின் சமூக நல நாட்டம் வெளிப்படுவதாக இருந்தாலும் இங்கு தங்கச்சியம்மா வினூடாக நந்தியின் சிந்தனையே வெளிப்படுத்தப்படுகின்றது. யாழ்ப்பாணத்திற்கு வந்து மலையகத்தவள் ஒருத்தி சமூகத் தொண்டாற்ற விருப்பத்தோடு நிற்பதை எடுத்துக் காட்டிய நந்தி தென்னிலங்கையில் சம்பளம் கூட இல்லாமல் தொண்டு செய்வதற்குப் பலர் ஆர்வத்தோடு இருப்தையும் யாழ்ப்பாணத்தில் இவ்வாறான சமூக நலச் சிந்தனை இல்லை என்பதையும் டாக்டர்

காசி நாதன், சுகாதாரப் பரிசோதகர் இம்மானுவேல் ஆகியோரின் உரையாடலினூடாக எடுத்துக் காட்டுகின்றார். இம்மானுவேல்,

"எங்கள் பகுதிகளில் காசு இல்லாமல் வேலை செய்வது என்றால் ஒரு பிள்ளையும் வராது. சிங்களப் பகுதிகளில் பாருங்கள் சேர் சிரமதானம் மூலம் என்னவெல்லாம் செய்கிறார்கள். பெரிய ரோட்டுப் போடுவது தொடக்கம் மலகூடம் கட்டுவது வரை சிரமதானத்தில் நடக்குது. இங்கே செய்யுங்கோ பார்ப்பம் முடியாது."[34]

டாக்டர் காசிநாதன்,

> "கக்கூசு கட்டுவிப்பதோடும் பிள்ளை பிறப்பிப்பதோடும் கிளினிக்கோடும் எங்கள் வேலை முடிவதில்லை. தடுப்பு வைத்தியம் ஒரு சமூக சேவை. ஒரு குடும்பத்தையும் கிராமத்தையும் நோயிலிருந்து காப்பாற்றிச் சுக நிலையில் வைத்திருப்பதற்கு நாங்கள் பலரின் உதவியை நாட வேண்டியிருக்கும். கிராமசேவகர் முதல் காரியாதிகாரி வரை நாம் போக வேண்டும்."[35]

மேற்படி டாக்டர் காசிநாதனும் இம்மானுவேலும் பேசுவது நந்தியின் சிந்தனைகளையே என்பதால் நந்தி சமூக முன்னேற்றம் குறித்து எவ்வாறு சிந்திக்கின்றார் என்பதையும் சமூக முன்னேற்றத்தில் அக்கறை காட்டாத யாழ்ப்பாணச் சமூகத்தை எவ்வாறு விளங்கிக் கொள்கின்றார் என்பதையும் எம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது.

பாசக் குளம் கிராமத்தை முன்னேற்றுவதற்காக அங்கு ஒரு சனசமூக நிலையம் அமைக்கப்படுகின்றது. இது சனசமூக நிலையங்களின் மூலமாக கிராமங்களை முன்னேற்ற முடியும் என்ற நந்தியின் கருத்தை வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

**நம்பிக்கைகள்** என்னும் நாவலில் சமூகக் குறைபாடுகளை எடுத்துக் காட்டி முன்னேற்றப் பணிகளை மேற்கொள்வதில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. நாவலின் பிரதான பாத்திரங்களாக உள்ள பாஸ்கரன், யேசுதாசன் மாஸ்டர், ஆகியோர் சமூகப் பணிகளை மேற்கொள்வதையே தமது முக்கியமான நோக்கமாகக்

கொண்டுள்ளனர். நந்தியின் சமூக முன்னேற்றம் குறித்த ஆர்வமே இவர்களைத் தனிமனித உணர்வு நிலையினின்றும் விடுபட்ட இலட்சியப் பாத்திரங்களாக உருவாக்கி இருக்கின்றது எனலாம்.

மகாத்மா காந்தி கிராமங்களே நாட்டின் முதுகெலும்பு என்றார். சர்வோதய இயக்கக் கொள்கைகளில் நாட்டமுள்ளவரும் கிராம வாழ்க்கையுடன் சிறிது காலம் தன்னைப் பிணைத்துக் கொண்டவருமான நந்தியும் சமூக நலச் சேவைகளில் ஈடுபடுவதற்கான களமாகக் கிராமங்களையே கருதுகின்றார். இதனாலேயே உரிமைகள் மறுக்கப்பட்ட மக்கள் வாழும் பாசக் குளமும், பச்சை வேலியும், மலையகமும் நந்தியின் நாவல்களுக்கான களமாக அமைந்திருக்கின்றன.

நம்பிக்கைகளில் பச்சை வேலிக் கிராமத்து வைத்தியசாலை பாஸ்கரனின் வரவால் புதுப்பொலிவு பெற்றிருப்பதைக் காட்டிய நந்தி,

> "ஆஸ்பத்திரி என்றால் முழுக்க முழுக்க நோயுற்றவர்களைப் பராமரிக்கும் இடம் என்றுதானே எண்ணம். ஆனால் பச்சைவேலி ஆஸ்பத்திரியில் இப்போது நோயாளருக்குச் சிகிச்சை மட்டுமல்ல நோய்த் தடுப்பு வேலைகளும் சுகம் பேணும் காரியங்களும் நடைபெறுகின்றன. சீராக நடைபெறாதிருந்த தாய் - குழந்தை சிறுவர் கிளினிக்குகள் இப்போது ஒழுங்காகவும் ஒழுக்கமாகவும் இயங்கத் தொடங்கி விட்டன. அவன் பாடசாலைக்குச் சென்று பள்ளிச் சிறுவர்களின் சுகம் பேணும் கடமையையும் சீராகச் செய்ய ஆரம்பித்து விட்டான்" [36]

எனக் கூறுகின்றார். இது சமூக முன்னேற்றத்தின் மீதான நந்தியின் அக்கறையினையும் ஒரு வைத்தியன் எவ்வாறு செயற்பட வேண்டும் என்ற அவரது கருத்தினையும் எடுத்துக் காட்டுகின்றது.

சுகமான வாழ்வை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மட்டும் கொடுத்துவிடப் போவதில்லை. இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பும் அவசியமாகும். இதனை பாஸ்கரனின் மூலமாக நந்தி

பதிவு செய்கின்றார்.

"மக்கள் தாமாகத் தங்கள் தேவைகளை இனங்கண்டு தமது ஆதாரங்களையும் சாதனங்களையும் வருவாயையும் கொண்டு சுகமாக வாழ்வதற்கு ஒத்துழைக்க வேண்டும்."[37]

இதன் ஒரு வெளிப்பாடாகவே பச்சை வேலிக் கிராமத்தில் முதலுதவி வகுப்புகளும் சுகாதாரக் கண்காட்சிகளும் நடாத்தப்படுகின்றன.[38]

மேலும், இவ்வாறான சமூக சேவைகளை ஒழுங்குற அமைப்பதற்கு கிராமத்துக்கொரு சமூக அபிவிருத்திச் சங்கம் தேவை என்பது நந்தியின் கருத்தாகும். இதனாலேயே பச்சைவேலிக் கிராமத்திலும் இளைஞர்களின் முயற்சியால் கிராம முன்னேற்றச் சங்கம் உருவாக்கப்படுகின்றது. கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆஸ்பத்திரியிற் கூட சிரமதானம் செய்யப்படுகின்றது. கிராமத்து இளம் பெண்களில் பலர் ஆஸ்பத்திரி கிளினிக்குகளில் தொண்டர்களாகப் பணிபுரியச் சேர்ந்து கொள்கின்றார்கள்.[39] என்றெல்லாம் நந்தியின் நாவலில் விபரிக்கப்படுவது அவரது சமூகப் பார்வையினையே எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

மேலும் பாஸ்கரனுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் குழந்தை மருத்துவ விரிவுரையாளராக நியமனம் கிடைத்த போது அவன்,

"குழந்தை மருத்துவம் ஒரு சமூக சேவை கூட. அந்தச் சேவையை மருத்துவ பீடத்தில் இருந்து கொண்டு பச்சைவேலி, பாசக்குளம் போன்ற கிராமங்களுக்கு மட்டுமல்ல பிரதேசத்திலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் கொண்டு செல்ல முடியும்."[40]

எனக் கூறுகின்றான். இது கிராம அபிவிருத்தியில் நந்தி காட்டுகின்ற அக்கறையின் வெளிப்பாடாகும்.

**சமூக பொருளாதார முரண்பாடுகள்**

சமூகச் சீர்குலைவுகளை உருவாக்குவதில் பொருளாதார ரீதியான முரண்பாடுகளே பிரதான பங்கை வகிக்கின்றன. இதனை நந்தியின் நாவல்களும் வெளிப்படுத்துகின்றன. மலைக் கொழுந்து என்னும் நாவல் தோட்டத் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையிலான முரண்பாட்டையே மையமாகக் கொண்டதாகும். தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி அவர்களை நிரந்தரமான கடன்காரர்களாகவே ஆக்கிவைத்த முதலாளிகள் அவர்கள் சிந்திக்கக் கூடாது என்பதற்காக அவர்களின் கல்வி வாய்ப்பைத் தடை செய்தனர். பின்னர் தோட்டப் பெண்களைப் பாலியல் ரீதியாகச் சுரண்ட முற்பட்டனர். இவ்வாறு பல்வேறு வகையாலும் அடக்கி ஒடுக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காகப் போராடுவதை மலைக்கொழுந்து எடுத்துக் காட்டுகின்றது. இது சமூக, பொருளாதார ரீதியில் ஏற்பட்ட வர்க்கப் போராட்டமாகவே அமைந்துள்ளது.

**தங்கச்சியம்மா** என்னும் நாவலின் களமான பாசக்குளத்து வீடுகளில் உள்ள பொதுவான பிரச்சினைகள் பலவும் பொருளாதார வசதியின்மையின் விளைவுகளேயாகும். பாசக் குளத்தில் பணியாற்றும் மருத்துவ மாதுவான தங்கச்சியம்மாவின் கூற்றாக அங்குள்ள வீடுகளின் நிலையை நந்தி பதிவு செய்கின்றார்.

> "வறுமை, கல்வியின்மை, சமூக ஒதுக்கீட்டு நிலையால் ஏற்பட்ட மனோபாவம், இந்த அடிப்படையில் ஏற்பட்ட பிரச்சினைகள் அவை. மனிதன் வாழத் தகுதியற்ற வீடு, போதாத குடிநீர், கக்கூசு இன்மை, நித்திய நோய், போசனைக் குறைவு, எதற்கும் சண்டை சச்சரவு, கிடைக்கக் கூடிய சுகாதார வசதிகளை உபயோகிக்கத் தெரியாமை, இப்படியான குறைபாடுகள் எல்லா வீடுகளிலும் விதம் விதமான வகையிலும் தரத்திலும் உண்டு.[41]

நந்தி தங்கச்சியம்மாவின் மூலமாக எமக்குக் காட்டும் பாசக்குளத்து

மக்களின் அவலம் நிறைந்த வாழ்வுக்கு சமூக, பொருளாதார முரண்பாடுகளே காரணமாகும்.

**நம்பிக்கைகள்** என்னும் நாவலில் வருகின்ற அம்பிகாபதி சாதாரண குடும்பத்தில் பிறந்தவன். அவனின் நண்பன் பாஸ்கரன் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன். அம்பிகாபதி பல்கலைக்கழகத்தில் படிப்பதற்காக மாமனிடம் மாதாமாதம் பண உதவியைப் பெற்றுக் கொண்டவன். மாமனும் தனது மகள் இராசாத்தியை அம்பிகாபதி திருமணம் செய்து கொள்வான். என்ற நம்பிக்கையிலேயே அவனுக்குப் பணம் கொடுத்து வந்திருக்கின்றார். அம்பிகாபதி கொழும்பில் பாஸ்கரனின் வீட்டிற்குச் சென்றபோது அவர்களின் ஆடம்பரமான வாழ்க்கையால் மனம் தடுமாறுகின்றான். பாஸ்கரனின் தங்கையான பாமினியை மணம் முடித்தால் தனது வாழ்க்கையையும் பொருளாதார அடிப்படையில் மேம்படுத்திக் கொள்ளலாம் என்று ஆசைப்படுகின்றான். அம்பிகாபதியின் தகப்பனும் டாக்டராகிவிட்ட மகனுக்கு இராசாத்தியை விடுத்து மேலும் வசதியான இடத்தில் பெண் எடுக்க ஆசைப்படுகின்றார். இதன்மூலம் அம்பிகாபதியின் தமக்கையான அன்னத்திற்கும் திருமணம் செய்துவிடலாம் என்பது இவர்களின் நினைப்பு. இவர்கள் அம்பிகாபதியின் மாமனிடம் வாங்கிய பணம், மாமன் மகள் இராசாத்தியின் வாழ்க்கை என்பது பற்றியெல்லாம் பொருட்படுத்த வேயில்லை. இங்கு மனித உறவுகள் பொருளாதார முரண்பாடுகளால் எவ்வாறு சீர்குலைகின்றன என்பதையே நந்தி எடுத்துக் காட்டுகின்றார்.

**மருத்துவ அறிவின்மையின் விளைவுகள்.**

நந்தியின் நாவல்களின் களங்கள் அனைத்தும் கல்வியறிவு குறைந்த கிராமப்புறங்களே. நந்தி கிராமப் புறங்களில் மக்களின் சமூக வாழ்க்கையை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தியுள்ளார். கிராமப் புறத்து மக்கள் கல்வியறிவின்மையால்

நோயின் தாக்கம் பற்றியோ அதன்விளைவுகள் பற்றியோ அறிந்திருப்பதில்லை. இதனால் இம்மக்களிடையே நோய்கள் வேகமாகப் பரவிப் பேராபத்தை விளைவித்துவிடுகின்றன. தங்கச்சியம்மாவில் வருகின்ற கந்தையா காய்ச்சல் வந்தபோது அதனை மற்றவர்களுக்குக் காட்டிக் கொள்ளா மலும் ஆஸ்பத்திரிக்குச் செல்லாமலும் மறைத்துவிடுகின்றார்.[42] தங்கச்சியம்மா பார்த்த வீடொன்றிலுள்ள நான்கு பிள்ளைகளில் எவருக்குமே தடுப்பூசிகள் எதுவும் போடப்படவில்லை[43]. சூரிய கலாவின் இரணைத் தம்பிமார் இருவருக்கும் போலியோ வந்ததால் ஒருவன் இறந்துவிட மற்றவன் ஒரு கால் ஊனமாகிவிட்டான்.[44] ஊரில் கொலறா பரவிய போது மக்கள் அதுபற்றி பொருட்படுத்தவில்லை. வயிற்றோட்டம் கூப்பன் மாவால் ஏற்பட்டதாகக் கூறுகின்றனர்.[45] மேலும் பிரசவத்திற்காக இவர்கள் வைத்தியசாலைக்குச் செல்வதை விரும்புவதில்லை[46]. இவை மக்களின் அறியாமையின் விளைவுகள்.

மக்களின் அறியாமையைப் பயன்படுத்தியே பல போலி வைத்தியர்களும் கிராமப் புறங்களில் பணியாற்றி வருகின்றனர் என்பதையும் நந்தி எடுத்துக் காட்டுகின்றார். தங்கச்சியம்மாவின் தாய்க்கு ஏற்பட்ட அற்பெண்டிசைட் நோயை தோட்ட வைத்திய சாலையில் இருந்த டிஸ்பென்சர் அடையாளங்கண்டு கொள்ளத் தவறிவிடுகின்றார். இதனால் அவள் இறக்க நேரிடுகின்றது.[47]. மந்திகை ஆஸ்பத்திரியில் மருந்து கலக்கியவரே அங்கு வேலையில் இருந்து நீக்கப்பட்ட பின் மலைநாட்டுத் தோட்டத்தில் டிஸ்பென்சராக வேலை ஏற்றிருக்கின்றார். இவரின் கவனக் குறைவினாலேயே தங்கச்சியம்மாவின் தாய்க்கு மரணம் சம்பவித்தது.

மேலும், கிராமப்புறங்களில் சில ஆயுர்வேத வைத்தியர்களும் சட்டவிரோத வைத்தியர்களும் பிரபலமான டாக்டர்களின் பிரிப்கிறிப்சனைப் பிரதிசெய்து நவீன மருந்துகளைக் கொடுத்து நோயாளிகளுடன் விளையாடுகிறார்கள். அத்துடன் சட்டவிரோதமான கருக் கலைத்தலிலும் இவர்கள் ஈடுபடுகிறார்கள் என்பதை நந்தியின் நம்பிக்கைகள் நாவல் எடுத்துக் காட்டுகின்றது.[48]

கிராமப் புறங்களில் வைத்தியசாலைகள் இல்லாததால் சட்டவிரோதமான போலி வைத்தியர்களை மக்கள் நம்ப வேண்டியிருப்பதை எடுத்துக் காட்டிய நந்தி இந்த நிலையை மாற்ற கிராமங்கள் தோறும் வைத்தியசாலைகள் அமைக்கப்பட்டு தகுதியான வைத்தியர்களும் நியமிக்கப்பட வேண்டும் என்கின்றார்.

**மூடநம்பிக்கைகள்**

மனிதவாழ்வு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதே. நம்பிக்கைகளில் சிலவற்றை இன்றைய காலத்தில் மூடநம்பிக்கைகள் என்று புறந்தள்ளவும் சிலர் முயற்சிக்கின்றார்கள். ஆனால் கிராமிய மக்கள் இன்னும் பழைமையைப் பேணுபவர்கள், அவர்கள் மரபான நம்பிக்கைகளைப் புறந்தள்ளி விடுவதில்லை. நந்தியின் நாவல்கள் கிராமங்களையே களமாகக் கொண்டனவாதலால் கதைப் போக்கில் மரபான நம்பிக்கைகள் பல வந்து போகின்றன.

தங்கச்சியம்மாவில், வீட்டில் பிரசவித்த ரேவதிப்பிள்ளை நச்சுக்கொடி விழாததால் உயிருக்காகப் போராடுகின்றாள். அவளை ஆஸ்பத்திரிக்கு அவசரமாகக் கொண்டு செல்ல முற்பட்டபோது தாய்,

> "இதென்ன அநியாயம் செய்யப் போறியள், அவளின்ரை உசிரை நிம்மதியாய்ப் போக விடுங்கோவன்" [49]

என்று ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்வதைத் தடுக்க முற்படுகிறாள். வீட்டில் நின்ற ஊர் மருத்துவிச்சி,

> "நாயும் ஊளையிடுகுது"[50] என்று ரேவதிப்பிள்ளையின் மரணத்தை உறுதிப்படுத்துவது போலப் பேசுகின்றாள். ஆனால் ஆஸ்பத்திரியில் அவள் உயிர் பிழைத்து விடுகின்றாள்.

சண்முகமணியின் தாய் தனக்குக் கருப்பையில் ஏற்பட்ட புற்றுநோய் பற்றி அறியாமல் தனக்கு "ஏழரைக் கடைக்கூறு" என்று சோதிடத்தில் பழி சுமத்துகின்றாள் [51] . ஆஸ்பத்திரிக்குச் செல்ல ஆயத்தமான போது மகள் செல்வராணி இடது கையில் பல்லி விழுந்ததாகக் கூறி

அதன் பலனை அறிய முற்படுகின்றாள்[52]. இடது கையில் பல்லி விழுந்தால் மரணம் என்று இரகுநாதையரின் வாக்கிய பஞ்சாங்கத்தில் செல்வராணி பலனைத் தேடிக் கண்டுபிடிக்கின்றாள்.[53] அவள் ஆரூட சக்கரத்திலும் கண்களை மூடித் தொட்டுப் பார்த்திருக்கின்றாள். அது புத்திரோற்பத்தி, இராஜபயம் என்றெல்லாம் தொடர்பில்லாத விடைகளைத் தந்தபோது தங்கச்சியம்மாவிடம் பல்லி விழுந்த பலன் சரியா? தவறா? எனக் கேட்கிறாள். அவள் அதுபற்றி விமர்சிக்காமல் டாக்டர் சொல்வதுதான் சரி எனக் கூறுகின்றாள்[54].

சோதிடம் தொடர்பான நம்பிக்கை கல்வியறிவு குறைந்த மக்களிடத்தில் மட்டுமன்றி படித்தவர்களையும் அது பாதித்திருப்பதை நம்பிக்கைகள் என்னும் நாவலில் எடுத்துக் காட்டியுள்ளார். டாக்டர் அம்பிகாபதி தனக்கும் பாமினிக்கும் திருமணம் நடைபெறுமா என்பதை அறிய பஞ்சாங்கத்திலுள்ள ஆரூட சக்கரத்தில் கண்களை மூடித் தொட்டுப்பார்க்கின்றான். அவனுக்கு “மருந்து சாப்பிட சுகம்” என்று பொருத்தமில்லாத விடையே கிடைக்கின்றது. அவன் பலமுறை முயன்றபோதும் ஆரூட சக்கரத்தின் விடை அர்த்தமில்லாததாகவே கிடைத்தது[55]. எனக் காட்டுவதால் நந்தி இந் நம்பிக்கைகளை மூட நம்பிக்கைகளாகவே கருதுகின்றார் எனத் தெரிகின்றது.

ஆனால் காலங்காலமாக மக்கள் மத்தியில் இருந்து வருகின்ற நம்பிக்கைகள் காலப்போக்கில் அர்த்தம் தெரியாதனவாக மாறிப் போனாலும் நவீன விஞ்ஞான உலகில் அவற்றின் மீதான நம்பிக்கைகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டிருந்தாலும் மக்கள் இலகுவாக அவற்றில் இருந்து விடுபடுவதில்லை. ஏதோ ஒரு வகையில் அவர்கள் அந்த நம்பிக்கைகளால் ஆளப்படு பவர்களாகவே இருந்து வருகின்றார்கள். இதுவே சமூக யதார்த்தம். இதனை நந்தியும் புரிந்து வைத்திருக்கின்றார் என்பதற்கு நம்பிக்கைகள் என்னும் நாவலில் வருகின்ற பின்வரும் பகுதி தக்க

சான்றாகின்றது.

> "ஒருவருக்கு சோதிடத்தில் நம்பிக்கை இல்லாதிருக்கலாம். ஆனால் வாழ்க்கையின் வெற்றிக்கு மற்றவர்களின் நம்பிக்கைதானே தேவைப்படுகின்றது. நமது சமூகத்தில் சோதிடர்களின் வாக்கு, அவர்கள் கல்வியிலும் அறிவிலும் சுத்த சூனியமாக இருந்தாலும் எத்தகைய வலிமை பொருந்தியதாக இருப்பதுண்டு. சுபமுகூர்த்தம் பார்த்துக் கூறுவதற்கு மட்டுமல்ல வாழ்க்கையில் எத்தனையோ நிகழ்ச்சிகளைத் தோற்றுவிக்கவும் முடிக்கவும், அவற்றை மாற்றவும் மட்டுப்படுத்தவும், திருத்தவும், திரிக்கவும் சோதிடத்தின் இணக்கம் வேண்டியிருக்கின்றது. வீடு கட்டுதல் முதல் வைக்கோல் குவித்தல்வரை, தாலி கட்டுதல் முதல் நலமடித்தல் வரை பிறதேசப் பிரயாணம் முதல் பூசனி நடுதல் வரை இத்யாதி......................
>
> மனுச சோதிடர் மட்டும்தானா, சக்தி வாய்ந்தவர்கள் பல்லி சொல்லியும், நழுவி விழுந்தும், காகம் கரைந்தும் பாதிக்கப்பட்ட நிகழ்ச்சிகள், ஒற்றைப் பிராமணன், மொட்டைத் தலையன், மலடன் தடுத்த பிரயாண காரியங்கள், கனவும் தும்மலும் கலக்கிய கருவிலே அழித்த கைங்கரியங்கள் எத்தனையோ "[56].

இது மரபான நம்பிக்கைகளின் மீது நந்தி நம்பிக்கை கொள்ளவில்லை என்பதையும், மக்கள் நம்பியும் நம்பாமலும் இந்த நம்பிக்கைகளால் ஆளப்படுகின்றார்கள் என்ற சமூக யதார்த்தத்தையும் எடுத்துக் காட்டுகின்றது.

**முடிவுரை**

ஈழத்துத் தமிழ் நாவல் உலகம் நூறாண்டுகளைக் கடந்தது. எண்ணிக்கை அடிப்படையில் பலநூறு நாவல்கள் வெளியாகி யிருந்தாலும் கால வெள்ளத்தில் காணாமல் போனவை பல. நின்று

நிலைத்திருப்பவை மிகச் சில. எண்ணிக்கை அடிப்படையில் அதிகளவு நாவல்களை அள்ளிக் குவித்த படைப்பாளிகளின் வரிசையில் தானும் ஒருவனாகச் சேர்ந்து விடாமல் மூன்றே மூன்று நாவல்களை மட்டுமே எழுதிச் சாதனை படைத்தவர் நந்தி. நந்தியின் நாவல்களைத் தவிர்த்து ஈழத்துத் தமிழ் நாவல் உலகைக் காண முடியாது என்ற நிலையை உருவாக்கியிருப்பவர் நந்தி. நந்தியின் புனைகதை ஆற்றல் அவரின் சமூக நோக்கின் விளைவால் ஏற்பட்டது. மலையகம், யாழ்ப்பாணத்துப் பிற்பட்ட கிராமங்கள் ஆகியவற்றைக் களமாகக் கொண்ட இவரது நாவல்கள், சாதியம், வறுமை, பொருளாதார ஏற்றத்தாழ்வு, கல்வியறிவின்மை, மூட நம்பிக்கை முதலான காரணங்களால் காலங்காலமாக பிற்பட்ட நிலையிலேயே இருந்து வரும் கிராமங்களை எடுத்துக் காட்டி அவ்வாறான கிராமங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தி முன்னேற்றத்தை உண்டு பண்ணுவதையே பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. நந்தி எந்த விதமான கோட்பாடுகளுக்குள்ளும் கட்டுப்பட்டு நிற்காமல் மனிதாபிமான உணர்வுடன் சமூகத்தை நோக்கி அதன் விடிவுக்கான பாதையைக் காட்டியிருக்கின்றார். மலைக் கொழுந்தில் ஆரம்பித்த இப்பணி நம்பிக்கைகளில் நிறைவடைந்து விட்டது. ஈழத்துத் தமிழ் நாவல் உலகம் காத்திரமான ஒரு படைப்பாளியை இழந்து விட்டாலும் அவரது படைப்புக்களால் அவர் சாகாவரம் பெற்றவராகி விட்டார். ஈழத்தில் தமிழ் வாழும் வரை நந்தியின் நாமமும் வாழும் என்ற நம்பிக்கையோடு இந்த உரையை நிறைவு செய்கின்றேன்.நன்றி, வணக்கம்.

அடிக் குறிப்புக்கள்


1. இரகுநாதன், ம., (2013) முற்போக்கு இயக்கமும் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளும். S.S.R. Printers. யாழ்ப்பாணம்.
2. சிவத்தம்பி,.கா., (1987) ஈழத்தில் தமிழ் இலக்கியம் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
3. மேலது,ப.45.
4. நந்தி, (1964) மலைக்கொழுந்து, ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம்.
5. நந்தி, (1977) தங்கச்சியம்மா, வீரகேசரி வெளியீடு, கொழும்பு
6. நந்தி, (1989) நம்பிக்கைகள், வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம்.
7. நந்தி, (1977) தங்கச்சியம்மா, ப.2
8. மேலது,ப.4
9. மேலது, ப.56
10. மேலது, ப.57
11. மேலது, ப.58
12. மேலது, ப.61
13. மேலது, ப.105
14. மேலது, ப.147
15. நந்தி, (1989) நம்பிக்கைகள், ப.18
16. மேலது, ப.18
17. மேலது, ப.19
18. மேலது, ப.289
19. மேலது, ப. 289
20. மேலது, ப.327
21. நந்தி, (1964) மலைக்கொழுந்து, ப.23
22. மேலது, ப.157
23. மேலது, ப.157
24. நந்தி (1977) தங்கச்சியம்மா, ப.55

25. நந்தி, (1989) நம்பிக்கைகள், ப.3
26. மேலது, ப.7
27. மேலது, ப.250
28. மேலது, ப.224
29. நந்தி, (1964) மலைக் கொழுந்து, ப.31
30. மேலது, ப.33
31. மேலது, ப.230
32. மேலது, ப.72
33. நந்தி, (1977) தங்கச்சியம்மா, ப.44
34. மேலது, ப.30
35. மேலது, ப.33
36. நந்தி, (1989) நம்பிக்கைகள், ப.301
37. மேலது, ப. 304
38. மேலது, ப.313
39. மேலது, ப.302
40. மேலது, ப.322
41. நந்தி, (1977) தங்கச்சியம்மா, ப.71
42. மேலது, ப.70
43. மேலது, ப.72
44. மேலது, ப.85
45. மேலது, ப.132
46. மேலது, ப.20
47. மேலது, ப.14
48. நந்தி, (1989) நம்பிக்கைகள், ப.169
49. நந்தி, (1977) தங்கச்சியம்மா,ப.20
50. மேலது, ப.20
51. மேலது, ப.90
52. மேலது, ப.92
53. மேலது, ப.96

54. மேலது, ப.97

55. நந்தி, (1989) நம்பிக்கைகள், ப.65

56. மேலது, ப.66



பேருரையினை நிகழ்த்தும் பேராசிரியர் ம.இரகுநாதன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் கடந்த கால்நூற்றாண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரிபவர். அவர் அடங்காப் பற்றென அந்நியரால் கூறப்பட்ட வன்னிப்பிரதேசத்தின் பழம்பெருமை வாய்ந்த முள்ளியவளையைப் பிறப்பிடமாக கொண்டவர். வன்ன வள நாட்டிற்கு தாரகையாய் நிற்கும் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் பயின்ற இவர் சில ஆண்டுகள் அங்கு ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே மூத்த தமிழப் பேராசிரியர்களான சு.வித்தியானந்தன் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி , ஆ.வேலுப்பிள்ளை, அ.சண்முகதாஸ் ஆகியோரிடம் கல்வி பயிலும் வாய்ப்பினைப் பெற்றவர்

இவர் வன்னிப் பிரதேசத்தில் வாய்மொழியாக வழங்கி வந்த 'சிலம்பு கூறல்' என்னும் காவியத்தை பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையின் வழிகாட்டுதலுடன் ஆய்வு செய்து முதுகலைமாணிப் பட்டத்தையும் பின்னர் 'ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்' என்னும் தலைப்பில் பேராசிரியர் நா.சுப்பிரமணியனின் வழிகாட்டுதலுடன் ஆய்வுசெய்து கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

பல ஆய்வரங்குகளில் பங்குபற்றி ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றைச் சமர்ப்பித்த அனுபவமுள்ள பேராசிரியர் ம.இரகுநாதனின் வழிகாட்டுதலில் பலர் முதுதத்துவமாணி மற்றும் கலாநிதிப் பட்டங்களையும் பெற்றுள்ளனர்.

ஆய்வரங்குகளிலும் சஞ்சிகைகளிலும் இவரது கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன. இதுவரையில் பத்து நூல்கள் வரையில் இவர் வெளியிட்டுள்ளார்.

Virus Printers Inuvil